## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வானூர்.

திரு.பொன்வேந்தன்,B.Tech,M.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் உறுதி மொழி சட்டம் பிரிவு 105-வது ஏற்பாட்டின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | - | திரு.ராஜேந்திரன் | அசல் வழக்கு எண். | 29 /2020 |
| த/பெ. | - | கண்ணன் | வா.சா. | 1 |
| கிராமம் | - | | | |
| வட்டம் | - | | | |
| தொழில் | - | | | |

03.07.2025.

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.

1. நான் எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் இடம் பிரச்சனை சம்மந்தமாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் ஆரம்பத்தில் ராஜேந்திரன் என்பவர் பெயரில் இருந்தது, அவரிடம் இருந்து எனது பங்காளி வீட்டு அண்ணன் சுப்பரமணி என்பவர் கிரையம் வாங்கினார். மேற்படி சுப்பரமணியின் பெயரில் உள்ள ஆவணம்தான் வா.சா.ஆ.1 ஆவணம் என்றால் சரிதான். தாவா சொத்தை சுப்பரமணி என்பவர் ஆண்டு அனுபவித்து வந்து அவர் இறந்து பிறகு அவரது வாரிசுகளான 1 முதல் 3 பிரதிவாதிகளிடம் இருந்து 4ம் பிரதிவாதி கிரையம் வாங்கினார்கள் என்றால் சரிதான்.

2. தாவா சொத்தை 4ம் பிரதிவாதி கிரையம் வாங்கிய பின்பு தற்போது வரை அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். தாவா சொத்தில் 4ம் பிரதிவாதி மின் இணைப்பு பெற்று அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். வா.சா.ஆ 1 முதல் வா.சா.ஆ.5 ஆவணங்கள் எனது பெயரில் இல்லை என்றால் சரிதான். என் பெயரில் உள்ள வாய்தா ரசீதுகள் மற்றும் அடங்கல் ரசீதுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

1ம் பிரதிவாதியின் கணவரான இறந்துபோன சுப்பரமணி என்பவரிடம் தாவா சொத்திற்கு ரூ.60,000/- கிரைய தொகை கொடுத்ததாக எனது பிரமாண பத்திரிக்கையில் சொல்லியுள்ள நிலையில் அதற்கு ஆதரவாக எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றும் சாட்சிகள் முன்னிலையில் கொடுத்ததாகவும் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

3. குறித்தவரை பரிகார சட்டத்தின் படி வழக்கு தாக்கல் செய்வதற்கான ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதியின் கிரைய பத்திரம் செல்லாது என்று நான் பரிகாரம் கோரமுடியாது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் தற்போது வரை 4ம் பிரதிவாதிதான் அனுபவித்து வருகிறார் என்றும் அதன் அடிப்படையில்தான் மின் இணைப்பு கொடுக்கப்பட்டது என்றும் நான் பொய்யான பொருண்மைகளை சொல்லி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

மறு விசாரணை- இல்லை.

Taken down by me in the presence of the withess read over th the witness are admitted by him/her to be correct.

District Munsif
Vanur.